



# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351







குடியரசுத் தலைவர் திரவுபதி பிறப்பித்த-என்சிசிஎஸ்ஏஉருவாக்குவதற்கான சட்டம்

# ஆதரவு

## மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக் கூடிய ஆட்சியை சுதந்திரமாக செயல்படவிடாமல் தொடர் நெருக்கடிகள், மத்திய அரசின் அவசர சட்டத்தை திமுக எதிர்க்கும் கேஜ்ரிவால் சந்திப்புக்குப் பின் முதல்வர் ஸ்டாலின் உறுதி

**சென்னை , ஜூன். 02-**

**"டெல்லி மாநில அரசுக்கு சாதகமாக உச்ச நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பு நிறைவேறக் கூடாது என்ற எண்ணத்தோடு ஆளும் பாஜக அரசு ஓர் அவசர சட்டத்தை பிறப்பித்திருக்கிறது. இந்த அவசர சட்டத்தை திமுக கடுமையாக எதிர்க்கும். அதில் எந்த மாற்றமும் கிடையாது" என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.**



டெல்லிமாநில அரசின் அதிகாரத்தைப் பறிக்கும் அவசர சட்டத்தை நிராகரிக்க ஆதரவு கோரி டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால், பஞ்சாப் முதல்வர் பகவந்த் சிங் மான் ஆகியோர் நேற்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை அவரது இல்லத்தில் சந்தித்தனர். பின்னர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது முதல்வர் ஸ்டாலின் கூறியது: "டெல்லியில் உள்ளது போன்ற மாதிரிப் பள்ளிகளை தமிழகத்திலும் உருவாக்க வேண்டும் என்று நானும், பள்ளிக் கல்வித்துறை அமைச்சரும் டெல்லிக்கு சென்று ஆய்வு நடத்தினோம். அதைத் தொடர்ந்து தமிழகத்தில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்படுகிறது. பெண்கள் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு கல்லூரிக்குச் செல்லும்போது நிதி உதவி வழங்க முடிவெடுத்து புதுமைப்பெண் திட்டம் உருவாக்கப்பட்டு, மாதம் ஆயிரம் ரூபாய் வழங்க அந்த திட்டத்தை டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அவரும் வருகை தந்து சிறப்பித்தார். அப்படி வந்த நேரத்தில், கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தை நேரில் பார்வையிட்டு மகிழ்ந்தார். டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலைப் பொறுத்தவரை ஒரு நல்ல நண்பராக பழகி வருபவர்.

டெல்லி யூனியன் பிரதேச முதல்வருக்கு, அவர் சார்ந்திருக்கக் கூடிய ஆம் ஆத்மி கட்சிக்கு நெருக்கடி ஏற்படுத்த வேண்டும் என்று மோடி தலைமையிலான பாஜக ஆட்சி முடிவுசெய்துள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக் கூடிய ஆட்சியை சுதந்திரமாக செயல்படவிடாமல், பல்வேறு நெருக்கடிகளைத் தொடர்ந்து அளித்து வருகிறது. அதுமட்டுமின்றி டெல்லியின் துணை ஆளுநர் மூலமாகவும் பல்வேறு தொல்லைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

பணியாளர்கள் தொடர்பாக, உச்ச நீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் கொண்ட அமர்வு டெல்லி மாநில அரசுக்கு சாதகமான ஒரு அழகான தீர்ப்பை வழங்கியிருக்கிறது. ஆனால், அது நிறைவேறக் கூடாது என்ற எண்ணத்தோடு ஆளும் பாஜக அரசு, அந்தத் தீர்ப்பை எதிர்த்து ஓர் அவசர சட்டத்தை பிறப்பித்திருக்கிறது. இந்த அவசர சட்டத்தை திமுக கடுமையாக எதிர்க்கும். அதில் எந்த மாற்றமும் கிடையாது.

இது தொடர்பாக டெல்லி, பஞ்சாப் மாநிலத்தின் முதல்வர்களும் என்னுடன் கலந்து பேசினர். மற்ற மாநிலங்களின் முதல்வர்களும், பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் என்னென்ன நிலையில் இருக்கிறார்கள், அவர்களது ஆதரவைப் பெற என்ன செய்ய வேண்டும் என்பதையெல்லாம் நாங்கள் கலந்து பேசினோம். நிச்சயமாக அனைத்து மாநிலங்களின் முதல்வர்களும், அகில இந்திய அளவில் இருக்கக்கூடிய கட்சியின் தலைவர்களும் இதற்கு ஆதரவு தரவேண்டும் என்று இதன் மூலம் நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சந்திப்பு என்பது கடந்த வாரமே நடந்திருக்க வேண்டும். இந்தச் சந்திப்புக்காக டெல்லி முதல்வர் நேரம் கேட்டபோது நான் வெளிநாடு செல்வதாகவும், வந்தவுடன் சந்திப்பதாக அவரிடம் கூறியிருந்தேன். மிக ஆரோக்கியமாக நாட்டில் இருக்கும் ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வுடன் நடந்த இந்தச் சந்திப்பு தொடர வேண்டும்" என்றார் முதல்வர் ஸ்டாலின்.

முன்னதாக, தேசிய தலைநகர குடிமைப் பணி ஆணையத்தை (என்சிசிஎஸ்ஏ) உருவாக்குவதற்கான அவசர சட்டத்தை குடியரசுத் தலைவர் திரவுபதி அண்மையில் பிறப்பித்தார். தேசிய தலைநகர் பிரதேச டெல்லி அரசு சட்டத்தை (1991) திருத்தும் வகையிலும், குடிமைப் பணி அதிகாரிகளை கட்டுப்படுத்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட டெல்லி அரசுக்கே அதிகாரம் உள்ளது என உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நிராகரிக்கும் வகையிலும் இந்த அவசர சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அவசர சட்டம், டெல்லி அரசின் ஏ பிரிவு அதிகாரிகள் மற்றும் டெல்லி, அந்தமான் நிக்கோபர், லட்சத்தீவுகள், டாமன் டையு, தாத்ரா நாகர் ஹவேலி யூனியன் பிரதேசங்களின் குடிமைப் பணி (டிஏஎன்ஐசிஎஸ்) பிரிவைச் சேர்ந்த டெல்லி அதிகாரிகள் நியமனம் மற்றும் மாறுதல் விவகாரத்தில் பரிந்துரை செய்வதற்கான அதிகாரத்தை மத்திய அரசுக்கு வழங்குகிறது. அவசர சட்டத்தின்படி, என்சிசிஎஸ்ஏ-வுக்கு டெல்லி முதல்வர் தலைமை தாங்குவார். டெல்லியின் நிர்வாகியாக துணைநிலை ஆளுநர் செயல்படுவார் என்றும் குடிமைப் பணி அதிகாரிகள் நியமனம் மற்றும் பணியிட மாறுதல் விவகாரத்தில் அவருக்கே இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் உள்ளது என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.




▶ புதுக்கோட்டை டவுன் மச்சுவாடி அடுத்த புதுநகரில் அருள் பாலித்து வரும் ஸ்ரீகருமாரியம்மன் கோவில் கும்பாபிஷேக விழா நேற்று வெகுவிமர்சையாக நடைபெற்றது. விழாவில் நகர் மன்ற தலைவர் திலகவதி செந்தில் உள்ளிட்ட நகர்மன்ற உறுப்பினர் கார்த்திகைச்செல்வி குமார் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## 11 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு 5 நாட்களுக்கு மழை தொடருமாம்: வானிலை அலெர்ட்!

சென்னை, ஜூன். 02-

தமிழகத்தில் அடுத்த 5 நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்னிந்திய பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி மற்றும் வெப்ப சலனம் காரணமாக,

02.06.2023: தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

03.06.2023 மற்றும் 04.06.2023: தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

05.06.2023: தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.



சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கான வானிலை முன்னறிவிப்பு:

அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசான / மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 39 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 29 டிகிரி செல்சியஸை ஒட்டியே இருக்கும்.

அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 39-40 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 28-29 டிகிரி செல்சியஸை ஒட்டியே இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "கர்நாடக அரசு மேகேதாது அணை கட்டுவதை நாங்கள் தடுத்து நிறுத்துவோம்" அண்ணாமலை

**தூத்துக்குடி , ஜூன். 02-**

"கர்நாடக அரசு மேகேதாட்டு அணையை கட்ட முயற்சித்தால், நாங்கள் தடுத்து நிறுத்துவோம். மேகேதாட்டு நோக்கி நடைபயணம் நடத்தவும் தயாராக இருக்கிறோம்" என்று பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.



தூத்துக்குடியில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, "தமிழ்நாட்டுக்கு தொழில் முதலீடுகள் வரும் என்பதால் முதல்வரின் வெளிநாட்டு பயணத்தை வரவேற்கிறோம். அதேநேரத்தில் முதல்வர் ஏற்கெனவே துபாய் சென்று வந்தார். அதனால் தமிழகத்துக்கு கிடைத்த தொழில் முதலீடுகள் கொடர்பாக இதுவரை வெள்ளை அறிக்கை வெளியிடவில்லை. விரைவில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்த உள்ளதாக தெரிவித்துள்ளனர். எனவே, இதனால் தமிழகத்துக்கு என்ன பயன் கிடைக்கும் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

மேகேதாட்டு அணை: கர்நாடகா தேர்தலில் பாஜக சார்பில் நான் இணை தேர்தல் பொறுப்பாளராக சென்றபோது, பத்திரிகையாளர் சந்திப்பில் மேகேதாட்டு அணை கட்டக் கூடாது என்று கூறினேன். ஆனால், காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் மேகேதாட்டு அணை கட்டப்படும் என கூறியிருந்தது. தற்போது மேகேதாட்டு அணையை கட்ட வேண்டும் என்று கர்நாடக துணை முதல்வரும், நீர்ப்பாசனத் துறை அமைச்சருமான டி.கே.சிவக்குமார் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக தமிழக முதல்வரிடம் இருந்தோ, தமிழக காங்கிரஸ் கட்சியிடம் இருந்தோ எந்த கருத்தும், கண்டனமும் வரவில்லை. முல்லை பெரியாரிலும் இதே பிரச்சினை தான் நடைபெற்றது. தமிழகத்தின் உரிமைகளை முதல்வர் தொடர்ந்து விட்டுக் கொடுத்து வருகிறார். அவர்களால் முடியவில்லை என்றால், மேகேதாட்டு அணை கட்டுவதை நாங்கள் தடுத்து நிறுத்துவோம். அதற்கான திறமை எங்களிடம் உள்ளது. இதற்காக மேகேதாட்டு நோக்கி தமிழக பாஜக சார்பில் நடைபயணம் கூட நடத்த தயாராக இருக்கிறோம்.

ஆளுநர் அழைத்துள்ள கூட்டத்தில் துணை வேந்தர்கள் கலந்து கொள்ளக் கூடாது என உயர்கல்வித் துறை அமைச்சர் பொன்முடி கூறியுள்ளார். துணை வேந்தர்களை ஆளுநர்கள் சந்தித்து பேசுவது எப்போதும் நடைபெறும் நிகழ்வுதான். தற்போது அரசியல் செய்கிறார்கள். தமிழக அரசு எப்போது திருந்த போகிறது என்று தெரியவில்லை. இவர்களின் மனப்பான்மையால் தமிழில் 36 ஆயிரம் மாணவர்கள் தோல்வி அடைந்துள்ளனர். இதே மனப்பான்மையில் இருந்தால் அடுத்த ஆண்டு இந்த எண்ணிக்கை அதிகரிக்கத்தான் செய்யும். பொறுத்து இருந்துதான் பார்க்க வேண்டும். காலம் தான் பதில் சொல்லும்.

கட்சியில் பழைய பஞ்சாங்கத்தை வைத்து என்னை யாரும் கட்டுப்படுத்த முடியாது. எல்லோரையும் அரவணைத்துச் செல்கிறேன். டெல்லிக்குச் சென்று பேசுங்கள். என்னை தூக்குங்கள். நான் எப்போதும் ஒரே மாதிரி தான் இருப்பேன். தலைவராக இல்லாவிட்டாலும் இப்படித்தான் பேசுவேன். நான் தொண்டர்களுக்காக இருக்கும் தலைவன். கட்சி வளர்ச்சி பெற வேண்டும், ஆட்சிக்கு வரவேண்டும் என்று நினைக்கும் தலைவன்.

தூத்துக்குடி, நெல்லை போன்ற தென் மாவட்டங்களில் தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி முதலீட்டை கொண்டுவர வேண்டும். தென்மாவட்டங்களில் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட்டதால் இந்தியாவுக்கு எவ்வளவு பெரிய பின்னடைவு என்பதை நாம் தற்போது பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அதனால் பாதிப்புகள் தொடங்கிவிட்டது. தாமிரம் ஏற்றுமதி செய்து வந்த நிலை மாறி தற்போது இறக்குமதி செய்யும் நிலைக்கு வந்துள்ளோம். தாமிரத்துக்காக சீனாவை நோக்கி கைட்டி நின்று கொண்டிருக்கிறோம். தூத்துக்குடியில் ஆக்கபூர்மான பணிகளை செய்யும் அமைச்சர்கள் இல்லை.

ஜூலை 9-ம் தேதி ஊழல் எதிர்ப்பு நடைப்பயணம் தொடங்குகிறேன். இதனால் ஜூலை முதல் வாரத்தில் 2-வது ஊழல் பட்டியல் வெளியிடப்படும். திமுக ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகு அரசு அதிகாரிகள் தாக்கப்பட்டு வருகின்றனர். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு திமுகவின் ஒன்றிய செயலாளர்கள் கையில் இருப்பது போன்று தான் உள்ளது. இந்த ஆட்சி வேண்டுமா என்று மக்கள் தான் முடிவு செய்ய வேண்டும். திமுக ஓட்டைப்படகு என்பது எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. திமுக அமைச்சர்கள் அனைவரும் ஊழல்வாதிகள். அவர்களின் விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். எத்தனை நாள் ஏமாற்ற முடியும். திமுக அமைச்சர்களுக்கு தைரியம் கிடையாது. காலம் அவர்களை அழிப்பது உறுதி. தற்போது அந்த வேலையை நாங்கள் எடுத்துள்ளோம். என் மீது பல மானநஷ்ட வழக்கு போட்டு உள்ளார்கள். தைரியம் இருந்தால் நீதிமன்றத்துக்கு வாருங்கள். திமுகவின் அழிவு தமிழக மண்ணில் கண்டிப்பாக நடக்கும்" என்று அண்ணாமலை தெரிவித்தார்.

தொடர்ந்து பாஜக நிர்வாகிகளுடன் கட்சி வளர்ச்சி தொடர்பாக அண்ணாமலை ஆலோசனை நடத்தினர். நிகழ்ச்சியில் மாநில அமைப்பு பொதுச்செயலாளர் கேசவ விநாயகம், மாநில பொதுச்செயலாளர் பொன்.பாலகணபதி, மாநில துணைத்தலைவர் சசிகலா புஷ்பா, தெற்கு மாவட்ட தலைவர் சித்ராங்கதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முன்னதாக தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை பிரசித்தி பெற்ற தூத்துக்குடி பனிமய மாதா பேராலயத்துக்கு சென்று வழிபட்டார். அவருக்கு பேராலய பங்குதந்தை குமார்ராஜா மாதாவின் திருவுருவப்படத்தை வழங்கி ஆசி வழங்கினார்.

## சொகுசு கார் வரி விவகாரம் ஹாரிஸ் ஜெயராஜுக்கு விதிக்கப்பட்ட அபராதத்துக்கு ஐகோர்ட் இடைக்கால தடை

சென்னை, ஜூன். 02-

இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு சொகுசு காருக்கு நுழைவு வரி செலுத்தாத விவகாரத்தில் இசையமைப்பாளர் ஹாரிஸ் ஜெயராஜுக்கு விதிக்கப்பட்ட அபராதத்துக்கு இடைக்காலதடை விதித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



பிரபல இசையமைப்பாளர் ஹாரிஸ்ஜெயராஜ், கடந்த 2010ம் ஆண்டு மசராட்டி (Maserati Granturismo S Coupe) எனும் இத்தாலி நாட்டு சொகுசு காரை இறக்குமதி செய்தார். அதை தமிழகத்தில் ஓட்டுவதற்கு ஏதுவாக வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு செய்ய விண்ணப்பித்தார். ஆனால், இறக்குமதி செய்யப்பட்ட வாகனத்துக்கு நுழைவு வரி செலுத்தவில்லை எனக் கூறி, வாகனத்தை பதிவு செய்ய வட்டார போக்குவரத்து அலுவலகம் மறுத்து விட்டது. மேலும், 13 லட்சத்து 7 ஆயிரத்து 923 ரூபாய் நுழைவு வரி செலுத்தக் கூறி கடந்த 2019ம் ஆண்டு வட்டார போக்குவரத்து துறை நோட்டீஸ் அனுப்பியது.

இந்த நோட்டீஸை எதிர்த்து ஹாரிஸ் ஜெயராஜ் தாக்கல் செய்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்ற தனி நீதிபதி, நுழைவு வரியுடன் சேர்த்து அபராதமும் செலுத்த வேண்டும் என உத்தரவிட்டார். இதையடுத்து, 11 லட்சத்து 50 ஆயிரத்து 952 ரூபாய் அபராதம் செலுத்தும்படி தமிழக அரசு, ஹாரிஸ் ஜெயராஜுக்கு அரசு நோட்டீஸ் அனுப்பியது. இந்த நோட்டீசுக்கு தடை விதிக்கக் கோரி ஹாரிஸ் ஜெயராஜ் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார்.


இந்த வழக்கு நீதிபதிகள் மகாதேவன், முகமது சபீக் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது ஹாரிஸ் ஜெயராஜ் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் விஜயன் சுப்ரமணியம், "காருக்கான நுழைவு வரியை ஏற்கெனவே செலுத்தப்பட்டுவிட்டது. மேலும், நுழைவு வரி தொடர்பான வழக்குகளை விசாரித்த தனி நீதிபதி, சில வழக்குகளில் நுழைவு வரியை மட்டும் செலுத்த உத்தரவிட்டுள்ள நிலையில், தனக்கு மட்டும் அபராதத்துடன் செலுத்தும்படி உத்தரவிட்டது பாரபட்சமானது" என வாதிட்டார்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், அபராதம் செலுத்த வேண்டும் என்ற தனி நீதிபதியின் உத்தரவுக்கு இடைக்கால தடை விதித்து வழக்கின் விசாரணையை இரண்டு வாரங்களுக்கு தள்ளி வைத்தனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# அறந்தாங்கி அரசு கல்லூரியில் மாணவர் சேர்க்கை கலந்தாய்வு நடைபெற்று கொண்டிருக்கிறது




அறந்தாங்கி ஜூன் 2

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோயிலை அடுத்த பெருநாவலூரில் இயங்கி வரும் அறந்தாங்கி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 2023 -2024 ஆம் கல்வி ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை கலந்தாய்வு 29.5.2023 திங்கள் அன்று கல்லூரி முதல்வர் வீ.பாலமுருகன் தலைமையில் துவங்கி நடைபெற்று வருகிறது. முதல் நாள் திங்கள் அன்று மாற்றுத்திறனாளி மாணவர்கள், விளையாட்டு வீரர்கள், முன்னாள் ராணுவத்தினரின் வாரிசுகள், தேசிய மாணவர் படை மாணவர்கள், அந்தமான் நிக்கோபார் தமிழ் வழி மாணவர்கள் என அனைத்து பாடப்பிரிவுகளுக்கும் சிறப்பு கலந்தாய்வு நடைபெற்றது. அதனை தொடர்ந்து, முதல்கட்ட பொது கலந்தாய்வு நேற்று காலை வணிகவியல் மற்றும் வணிக நிர்வாகவியல் பாடப்பிரிவிற்கான கலந்தாய்வு நடைபெற்றது. அதனை தொடர்ந்து.

இன்று வணிகவியல் மற்றும் வணிக நிர்வாகவியல் பாடப்பிரிவுகளுக்கு நிரப்பபடாத இடங்களுக்கும், 05.06.2023 கணிதம், இயற்பியல் மற்றும் கணினி அறிவியல் பாடப் பிரிவுகளுக்கான கலந்தாய்வும் 06.06.2023 கணிதம், இயற்பியல் மற்றும் கணினி அறிவியல் பாடப் பிரிவுகளுக்கு நிரப்பப்படாத இடங்களுக்கு கலந்தாய்வும், 08.06|2023 தமிழ் மற்றும் ஆங்கில மொழி பாடங்களுக்கான கலந்தாய்வும் 09.06. 2023 தமிழ் மற்றும் ஆங்கில மொழி பாடங்களுக்கான நிரப்பப்படாத இடங்களுக்கும் கலந்தாய்வு நடைபெற இருக்கிறது. நடைபெறும் கலந்தாய்வில் கலந்து கொள்ளும் மாணவர்கள் இணையவழி விண்ணப்ப நகல், மாற்றுசான்றிதழ், பத்தாம்வகுப்பு மதிப்பெண் பட்டியல், 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மதிப்பெண்பட்டியல், ஜாதி சான்றிதழ், மாணவரின்ஆதார் அட்டை, மாணவரின் வங்கி சேமிப்பு கணக்குபுத்தகம், மாணவரின் பாஸ்போர்ட் சைஸ் போட்டோ,ஆறு உள்ளிட்ட ஆவணங்களையும் கலந்தாய்வில் கலந்து கொள்ளும் மாணவர்கள் கொண்டு வர வேண்டும் என்று கல்லூரி முதல்வர் வீ. பாலமுருகன் அறிவித்திருக்கிறார். கலந்தாய்வில் தேர்வு பெற்ற மாணவ மாணவிகளுக்கு அனுமதிச்சான்றை கல்லூரி முதல்வர் வழங்கினார்.

# அரசு உத்தரவை மீறும் பள்ளிகள் மீது நடவடிக்கை– அன்பில் மகேஷ் பொய்யாமொழி

சென்னை, ஜூன். 02-



தமிழகத்தில் அரசு உத்தரவை மீறி தனியார் பள்ளிகள் திறக்கப்பட்டது குறித்து பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:- கோடை வெயில் அதிகமாக இருப்பதையொட்டி பள்ளிகள் திறக்கும் தேதியை 7-ந் தேதிக்கு தள்ளி வைத்திருந்தோம். ஆனால் அதை மீறி தனியார் பள்ளிகள் திறந்திருந்தால் அந்த பள்ளிகளின் மீது அதிகாரிகள் விசாரணை நடத்தி நடவடிக்கை மேற்கொள்வார்கள்.

சி.பி.எஸ்.இ. பள்ளிக் கூடங்கள் அதுவும் 10-ம் வகுப்புக்கு மேல் திறந்திருக்கலாம். தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளிக் கூடங்கள் திறந்திருந்தால் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இது சம்பந்தமாக அதிகாரிகளுக்கு தேவையான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. கல்வித்துறை அதிகாரிகள் மாவட்டவாரியாக இதுபற்றி விசாரித்து வருகின்றனர் என்று கூறினார்.






அரசு முறை பயணமாக சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளுக்குச் சென்று தமிழகத்துக்கு பல்வேறு தொழில் முதலீடுகளை பெற்று தமிழகம் திரும்பிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சென்னை விமான நிலையத்தில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா வரவேற்று வாழ்த்து தெரிவித்தார்.

# மணப்பாறை நகராட்சி தூய்மை பணியாளர்கள் உள்ளிருப்பு போராட்டம்

**மணப்பாறை, ஜூன். 02–**



மணப்பாறை நகராட்சியில் பணிபுரியும் திருச்சி மாவட்ட உள்ளாச்சி தொழிலாளர்கள் ஏ.ஐ.டி.யூ.சி.சங்க தூய்மை பணியாளர்கள், ஒப்பந்த பணியாளர்கள் பதினைந்து பேரை வேலை நிறுத்தம் செய்ததை கைவிடவும், நிரந்தர பணியாளர்களுக்கு கூடுதல் பணிசுமை ஏற்படுத்துவதை கைவிடவும், குப்பைகளை எடைபோட்டு வாங்கும் முறையை கைவிட, வலியுறுத்தி உள்ளியிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தகவல் அறிந்த நகர்மன்ற தலைவர் கீதா மைக்கல் ராஜ், சுகதார பணி எஸ்.ஒ, ஆய்வாளர்கள் விரைந்து வந்து சங்க தலைவர் இந்திரஜித், ஜனசக்தி, உசேன், சுப்ரமணியன் மற்றும் சங்க நிர்வாகிகளுடன் போச்சு வார்த்தை நடத்தினார்கள். சட்டபடி நமது நகராட்சியில் சுமார் 200 பேர் நிரந்தர பணியாளர்களாக இருக்க வேண்டும். ஆனால் 64 பேர் மட்டுமே உள்ளனர்.

ஒப்பந்த பணியாளர்கள் 107 பேர் உள்ளனர். இதில் பதினைந்து பேரை நிறுத்துவது என்பது சரியல்ல என்று வலியுறுத்தியதை ஏற்று, ஒப்பந்த பணியாளர்கள் யாரையும் பணியில் இருந்து நிறுத்தக்கூடாது. அனைவரும் பணி செய்ய அனுமதித்து. ஒருவாரத்திற்குள் ஒப்பந்தம் எடுத்து உள்ள நிறுவத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி சுமுக முடிவுகள் ஏற்பட நடவடிக்கை எடுப்பது என்று தெரிவித்ததை தொடந்து இரண்டு மணி நேர உள்ளிருப்பு போராட்டத்தை தற்காலிகமாக கைவிட்டு பணிக்கு சென்றனர்.

# அரியலூர் ஆலந்துறையார் சிவன்கோவில் கும்பாபிஷேக விழா கோலாகலம் : பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம்

அரியலூர், ஜூன். 02-



அரியலூர் ஆலந்துறையார் சிவன் கோவில் கும்பாபிஷேக விழா கோலாகலமாக நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

அரியலூர் நகரின் தென்பகுதியில், அருந்தவ நாயகி உடனுறை ஆலந்துறையார் சிவன் கோயில் உள்ளது. 600 ஆண்டுகள் பழமையான வரலாற்று சிறப்பு பெற்ற இத்திருக்கோயிலின் அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேக விழா 1-ம் தேதி காலையில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

முன்னதாக கடந்த 25-ஆம் தேதி தொடங்கிய யாகசாலை பூஜையுடன், கணபதி ஹோமம், ஸ்ரீ லட்சுமி பூஜை, நவக்கிரக ஹோமங்கள் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு அஷ்ட பந்தன மருந்து சாத்துதல் நிகழ்ச்சியுடன் கும்பாபிஷேக விழா நிகழ்ச்சிகள் தொடங்கியது. 28 ஆம் தேதி கோ பூஜையும், 30 ஆம் தேதி செட்டி ஏரி விநாயகர் ஆலயத்தில் இருந்து கஜபூஜையுடன் தொடங்கி தீர்த்த சங்கரஹனம் நகரின் முக்கிய வீதிகளில் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு காலை யாக பூஜை தொடங்கப்பட்டது.

அனைத்து விக்னேஷ்வர பூஜை, கடஸ்தாபனம் முதல் கால யாக பூஜை, இரண்டாம் காலம் மற்றும் மூன்றாம் கால யாக பூஜை நடத்தப்பட்டன. தொடர்ந்து நேற்று காலை நான்காம் கால யாக பூஜைகள் நடத்தப்பட்டு, நாடி சந்தானம், தீபாராதனை காண்பிக்கப்பட்டது. தொடர்ந்து யாக சாலையில் இருந்து கடம் புறப்பாடு நடத்தப்பட்டது.

யாகசாலையில் இருந்து புனித நீர் ஊர்வலமாக கொண்டுவரப்பட்டு விநாயகருக்கு முதலில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஆலந்துறையார் சுவாமி மற்றும் அருந்தவநாயகி அம்பாள் விமானம் உள்ளிட்ட அனைத்து விமானங்களுக்கும், ஒரே நேரத்தில் கும்பாபிஷேக விழா நடத்தப்பட்டது.

கோவில் கோபுரகலசத்தில் ஊற்றப்பட்ட மகாகும்பாபிஷேக தீர்த்தம், பொதுமக்களுக்கும் தெளிக்கப்பட்டது. அரியலூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரளாக திரண்டு வந்து, மகா கும்பாபிஷேகத்தை கண்டு தரிசித்தனர். இதன் பின்னர் மூலவர் ஆலந்துறையார், அம்பாள் அருந்தவ நாயகி மற்றும் 64 நாயன்மார்கள் உள்ளிட்ட அனைவருக்கும், மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அதைத்தொடர்ந்து அலங்கரிக்கப்பட்ட ஆலந்துறையார் மற்றும் அருந்தவநாயகி ஆகியோருக்கு மகா தீபாரதனை நடைபெற்றது. திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். கும்பாபிஷேகத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் இந்து சமய அறநிலைத்துறை நிர்வாக அறங்காவலர்கள் ஆதரவுடன், ஓம் நமச்சிவாய திருப்பணிக்குழு, ஸ்ரீ நரசிம்மா டிரஸ்ட் நிர்வாகிகள் மற்றும் அரியலூர் நகர பக்த பிரமுகர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் சிறப்பாக செய்திருந்தனர்.

நிகழ்ச்சியில் காவல்துறை சார்பில் அரியலூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் சியாமளா தேவி தலைமையில், நூற்றுக்கு மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு படையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மாலையில் சுவாமி அம்பாள் திருவீதி உலா நிகழ்ச்சி நடைபெற்றது.

## "வெறுப்போ, கோபமோ இல்லை"

# தமிழகத்துக்கு கர்நாடக அமைச்சர் டி.கே.சிவகுமார் விளக்கம்

**பெங்களூரு, ஜூன். 02–**



மேகேதாட்டு அணை விவகாரத்தில் அண்டை மாநிலங்களான கர்நாடகா, தமிழக மக்கள் சகோதர, சகோதரிகள்போல் அணுக வேண்டும் என்று கர்நாடாக நீர்ப்பாசனத் துறை அமைச்சரும், அம்மாநில துணை முதல்வருமான டி.கே.சிவகுமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

கர்நாடக நீர்ப்பாசனத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள, அம்மாநில துணை முதல்வர் டி.கே.சிவக்குமார், காவிரி ஆற்றின் குறுக்கே மேகேதாட்டு அணையை கட்டுவதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆணையிட்டிருக்கிறார். மேகேதாட்டு அணை தொடர்பான பணிகளை மேற்கொள்ள உச்ச நீதிமன்றம் தடை விதித்துள்ள நிலையில், அதற்கு எதிரான கர்நாடக அமைச்சரின் கருத்து தமிழகத்தில் பெரும் எதிர்ப்பலைகளை ஏற்படுத்தியுள்ளது.

"கர்நாடக மாநில நீர்வளத் துறை அமைச்சர் சிவக்குமார் பதவிப் பிரமாணம் எடுத்த சில நாட்களுக்குள்ளாகவே அண்டை மாநிலத்தை உரசிப் பார்க்கிற காரியத்தை செய்வது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. மேகதாது பற்றிய முழு விவரத்தை அதிகாரிகள் இன்னும் அவருக்கு சொல்லியிருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்" என்று தமிழக நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. இதுபோல், தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, பாமக நிறுவனர் ராமதாஸ் உள்பட பல்வேறு கட்சியினரும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், கர்நாடக அமைச்சர் டி.கே.சிவகுமார் நேற்று வெளியிட்டுள்ள ட்வீட்கள் அவர் அணை விவகாரத்தில் உறுதியாக இருப்பதைக் காட்டுவதாக உள்ளது. அந்த ட்வீட்களில் அவர், "மேகேதாட்டு அணைக்காக இதுவரை 1,000 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், அதைக் கொண்டு அத்திட்டத்திற்காக இதுவரை செலவு ஏதும் செய்யப்படவில்லை. அணைக்கான நிதி ஒதுக்கீடு அதற்காகவே செலவு செய்யப்பட வேண்டும்.

தமிழக சகோதரர்கள் மீது வெறுப்போ, கோபமோ இல்லை. அவர்கள் எங்களின் சகோதர, சகோதரிகளைப் போன்றோர். கர்நாடகாவில் வசிக்கும் தமிழர்களும், தமிழகத்தில் வாழும் கன்னடர்களும் காவிரி நீரை அருந்துகின்றனர். இவ்விவகாரத்தில் நாம் நீதிமன்றங்களுக்கு அலைந்தது போதும். மேகேதாட்டு விவகாரத்தில் நாம் உடன்பட வேண்டும். மேகேதாட்டு அணை நம் இரு மாநிலங்களுக்குமே நன்மை பயக்கும். விவசாயிகளுக்கு பாசன நீரும், சாமான்ய மக்களுக்கு குடி தண்ணீரும் காவிரியில் இருந்து கிடைக்கும்.

நான் தமிழக அரசுக்கு ஒரு கோரிக்கை விடுக்கிறேன். நாம் இருவரும் அன்பான இதயம் கொண்டவர்கள். நம் இரு மாநில மக்களும் சகோதரத்துவத்துடன் வாழட்டும். ஒருவொருக்கொருவர் உதவி செய்து முன்னேறுவோம்" என்று கூறியுள்ளார்.

# மணமேல்குடி அருகே ஏனாதி கிராமத்தில் மத நல்லிணக்க மாட்டுவண்டி, குதிரை வண்டி எல்கை பந்தையம்

**மணமேல்குடி, ஜூன். 02–**



புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி தாலுகா ஏனாதி கிராமத்தில் அமைந்து அருள் பாலித்து வரும் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் மற்றும் சேக் இஸ்மாயில் ஒலியுல்லா தர்கா, இந்து, முஸ்லீம் இணைந்து நடத்தும் மத நல்லிணக்க திருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற மாட்டுவண்டி, குதிரை வண்டி எல்கை பந்தையத்தில் புதுக்கோட்டை, தஞ்சை, நாகை, சென்னை, திருச்சி, மதுரை, சிவகங்கை உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து மாடுகள் மற்றும் குதிரைகள் போட்டியில் பங்கேற்றன.

5 பிரிவுகளாக நடைபெற்ற பந்தையத்தில் பெரியமாடு, நடுமாடு, கரிச்சான் மாடு, நடுக்குதிரை, கரிச்சான் குதிரை என 32 ஜோடி மாடுகளும்,21குதிரைகளும் போட்டியில் கலந்து கொண்டு சீரிப்பாய்ந்தன. பந்தையத்தில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாடு மற்றும் குதிரைகளுக்கு 2 லட்சத்து 75 ஆயிரம் மதிப்பிலான கோப்பைகள் மற்றும் ரொக்கப்பணம் பரிசாக வழங்கப்பட்டது.

மேலும் மாடு மற்றும் குதிரைகளை சிறப்பாக ஓட்டி வந்த சாரதிகளுக்கு கொடிப்பரிசு மற்றும் சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது. சாலையின் இருபுறத்திலும் ரசிகர்கள் திரண்டிருந்து பந்தையத்தை கண்டு ரசித்தனர். 20க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். விழாவினை ஏனாதி கிராமத்தார்கள், இளைஞர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

# மௌண்ட்சீயோன் சர்வதேசப்பள்ளியில் மாணவ மாணவிகளுக்கான கோடைகால சிறப்பு பயிற்சி முகாம்

**புதுக்கோட்டை, ஜூன். 02–**



மௌண்ட்சீயோன் சர்வதேசப்பள்ளியில் மாணவ மாணவிகளுக்கான கோடைகால சிறப்பு பயிற்சி முகாமானது மே மாதம் முழுவதும் நடைபெற்றது . அதில் மாணவ மாணவிகளுக்கு கணிதம், மென்பொருள், கணிணி, வீடியோ எடிட்டிங், இசை, நடனம், ஓவியம், விளையாட்டு, குதிரையேற்றம், நீச்சல்,ஆங்கில பேச்சு பயிற்சி என 25 வகையான சிறப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டன. முகாமின் நிறைவு நாளில் பள்ளியின் முதல்வர் ஜலஜா குமாரி முன்னிலையில் கலை நிகழ்சிகளுடன் கூடிய நிறைவு விழா நடைபெற்றது.

விழாவில் முகாமில் கலந்து கொண்ட அனைத்து மாணவ மாணவியருக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. பள்ளியின் முதல்வர் உரையாற்றுகையில் கல்வியை தாண்டி திறமையை வளர்க்க மாணவர்கள் எடுத்த முயற்சி பாராட்டுக்கு உரியதாகும். இதை ஒவ்வொரு நாளும் கடைபிடிக்க வேண்டும். இது போன்ற வாய்ப்புகளை ஒரு போதும் நழுவ விடக்கூடாது.

நவீன உலகில் கற்றுக் கொண்டு இருப்பதே நமது நோக்கமாக கொள்ள வேண்டும் எனக் கூறினார். நிகழ்வின் இறுதியில் மாணவ மாணவியரின் கலைநிகழ்ச்சிகளும் அவர்களால்வடிவமைக்கப்பட்ட ஓவியங்களும் கண்காட்சி யாக்கப்பட்டன. கலந்து கொண்ட பெற்றோர்களும், மற்றவர்களும் கண்டு மகிழ்ந்தனர். இவ்விழாவிற்கான நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பாளர் சரண்குமார் பொறுப்பேற்று சிறப்பாக வழிநடத்தினார்.

# லிங்கத்தடிமேடு வள்ளலார் கல்வி நிலைய வளாகத்தில் சுகாதாரப் பணிகள்

அரியலூர் ஜூன் 2



லிங்கத்தடிமேடு வள்ளலார் கல்வி நிலைய வளாகத்தில், சுகாதாரப் பணிகள் நடைபெற்றன.

இது பற்றி வள்ளலார் கல்வி நிலைய தலைமை ஆசிரியர் சௌந்தர்ராஜன் வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது:

அரியலூர் அருகே, கயர்லாபாத் ஊராட்சிக்கு உட்பட்ட, அரசு உதவி பெறும் லிங்கத்தடிமேடு வள்ளலார் கல்வி நிலைய கே.ஆர்.வி நடுநிலைப் பள்ளியில், மாவட்டத் தொடக்ககல்வி அலுவலர் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்களின் வழிகாட்டுதல் நெறிமுறைகளின் படி, ஜூன் 7ஆம் தேதி பள்ளி திறப்பு முன்னிட்டு, பள்ளி வகுப்பறைகள், பள்ளி வளாகம் ,பள்ளி விளையாட்டு மைதானம், சுற்றுப்புறங்கள், கழிவறைகள், நீர்த்தேக்க தொட்டிகள் ஆகியவற்றை சுத்தம் செய்து, மாணவர்கள் வருகைக்காக தயார் படுத்தி உள்ளனர். ஊராட்சி மன்ற தலைவர் த.சௌந்தரராஜன், பணி தலப் பொறுப்பாளர்கள் கலையரசி, சித்ரகலா, பள்ளி தலைமையாசிரியர் பெ. சௌந்தரராஜன், பள்ளி செயல் முனைவர் புகழேந்தி, மற்றும் ஆசிரியர்கள் பணியாளர்கள் உடன் இருந்தனர்.

# ஆக்கூர் ராஜகோபால பெருமாள் கோயில் கும்பாபிஷேக விழா ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம்




தரங்கம்பாடி, ஜூன். 02-
மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுகா செம்பனார்கோயில் அருகே ஆக்கூரில் இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான புகழ்பெற்ற ஸ்ரீதேவி, பூதேவி உடனாகிய ராஜகோபால பெருமாள் கோயில் அமைந்து உள்ளது.

இக்கோயிலில் கும்பாபிஷேகம் செய்ய முடிவு செய்யப்பட்டுஉபயோதாரர்களால் திருப்பணி வேலைகள் நடைபெற்று வந்தது. இந்த திருப்பணி வேலைகள் முடிவடைந்ததை முன்னிட்டு நேற்று கும்பாபிஷேக விழா நடைபெற்றது. முன்னதாக கடந்த 30-ம் தேதி முதல் கால யாக சாலை பூஜை, பூர்ணாகுதி, இரண்டாம் கால யாகசாலை பூஜை நடைபெற்றன. நேற்று முன்தினம் மூன்றாம் மற்றும் நான்காம் கால யாகசாலை பூஜை, பூர்ணாகுதி நடைபெற்றதமலை கும்பாபிஷேக விழாவான நேற்று காலை ஐந்தாம் கால யாகசாலை பூஜை, மகாபூர்ணாகுதி உள்ளிட்ட பூஜைகள் நடைபெற்றன. தொடர்ந்து மேளதாளத்துடன் கடம் புறப்பட்டு கோயிலை வலம் வந்து விமான கோபுரத்தை அடைந்தது. பின்னர் பட்டாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க ஆதிநாராயணப் பெருமாள் சன்னதி விமான கோபுரத்தில் புனிதநீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இதேபோல் ராஜகோபால பெருமாள், கோதண்டராமர், கருடாழ்வார், ஆஞ்சநேயர் உள்ளிட்ட சாமி சன்னதிகளின் விமான கோபுரங்களிலும் புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடைபெற்றது. அப்போது கருடன் வட்டமிட அங்கு கூடியிருந்த ஏராளமான பக்தர்கள், கோவிந்தா கோவிந்தா என சரண கோஷமிட்டு பெருமாளை வழிபட்டனர். தொடர்ந்து கோயிலில் உள்ள அனைத்து சன்னதிகளிலும் சாமிக்கு மகா தீபாராதனை காண்பித்து, பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

விழாவை முன்னிட்டு அன்னதானம் வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் மற்றும் இணை ஆணையர் அறிவுறுத்தலின்படி செயல் அலுவலர் உமேஷ் குமார் கோயில் ஆய்வாளர்கள் கண்ணதாசன், பத்திரிநாராயணன், கோயில் பணியாளர்கள் சதீஷ், ஸ்ரீவித்யா ஆகியோர் செய்திருந்தனர். இதில் ஊராட்சி மன்ற தலைவர் சந்திரமோகன், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் காஞ்சனமாலா சேகர் மற்றும் ஊராட்சி பிரதிநிதிகள், ஆயிரத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து மாலை திருக்கல்யாண உற்சவம் நடைபெற்றது. இதில், ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்வாமி தரிசனம் செய்து வழிபட்டனர்.



சென்னை, வியாசர்பாடி, சர்மா நகரில் பரிவாரங்கள் சகிதமாய் எழுந்தருளி அருள் பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் மற்றும் ஸ்ரீ செல்வப்பிள்ளைப்பெருமாள் ஆலய நூதன ராஜகோபுரம் நிர்மாண ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம், வைகாசி மாதம் 18ஆம் நாள், 01.06.2023 வியாழக்கிழமை, வளர்பிறை துவாதசி திதி, சுவாதி நட்சத்திரம், அமிர்த யோகம் கூடிய சுபயோக சுபதனத்தில் காலை 8.00மணிக்கு மேல் 10.00மணிக்குள் வெகு விமர்சையாக நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவினை தொடர்ந்து மகா தீபாராதனை, மகா அபிஷேகம், தீர்த்த பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து சிறப்பு மாபெரும் அன்னதானமும் வழங்கப்பட்டது. விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலயத் தலைவர் என்.வீரராகவன் தலைமையில் சிவா விஷ்ணு சேவார்த்திகள் சங்க செயலாளர் பெரம்பூர் ஏ.பக்தவச்சலம் மற்றும் ஆன்மீகச் செம்மல்கள் லயன் ஆர்.பி.தர்மலிங்கம், ஏ.ஆர்.அரசப்பன் ஆகியோர் முன்னிலையில் ஆலய நிர்வாகிகள், கும்பாபிஷேக விழா குழுவினர் மற்றும் கிராம பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நியாய விலை கடைகளுக்கு அடிக்கல் நாட்டு விழா



செங்கல்பட்டு, ஜூன். 2-
செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் ஒன்றியத்துக்கு உட்பட்ட நேத்தப்பாக்கம் ஊராட்சிக்குட்பட்ட புலி கொரடு மற்றும் நல்லூர் ஊராட்சிக்குட்பட்ட பவுந்தன்கரணை இந்த கிராமங்களில் மக்கள் நீண்ட தூரம் சென்று நியாய விலைப் பொருட்களை வாங்கி வருகின்றனர்.

இதனால் எங்களுக்கு சரியான முறையில் ரேஷன் பொருட்கள் வாங்க முடியவில்லை என பொதுமக்கள் இந்தப் பகுதிகளில் எங்களுக்கு புதிதாக நியாய விலை கடை அமைத்து தர வேண்டும் என மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் அவர்கள் இடம் கோரிக்கை வைத்தனர் இந்த கோரிக்கையின் பேரில் மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒரு கடைக்கு ஏழு லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு கடைக்கு 14 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கடை கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் மரகத குமரவேல் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட கழக செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ் ஆறுமுகம் கலந்து கொண்டு நியாய விலை கடை கட்டிடம் கட்டுவதற்கான பணியை துவக்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மதுராந்தகம் ஒன்றிய குழு பெருந்தலைவர் கீதா கார்த்திகேயன் மதுராந்தகம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் முதுகரை கார்த்திகேயன் மற்றும் கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் ஏராளமான கலந்து கொண்டனர்.

## 200 ஆண்டுகள் பழமை வாய்ந்த நரசிங்கபுரம் கிராமத்தில்

# அருள்மிகு ஸ்ரீ ஏகவள்ளி அம்மன் திருக்கோவிலின் மகா கும்பாபிஷேகம்



ஊத்துக்கோட்டை, ஜூன்2-
திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், நரசிங்கபுரம் கிராமத்தில் சுமார் 200 ஆண்டுகள் பழமை வாய்ந்த அருள்மிகு ஸ்ரீ ஏகவள்ளி அம்மன் திருக்கோவில் ஒன்று உள்ளது.

இது சிதிலமடைந்து காணப்பட்டது.இக்கோவிலை கிராம பெருதனக்காரர்கள் மற்றும் கிராம பொதுமக்கள், விழா குழுவினர் புனரமைத்து நேற்று காலை மகா கும்பாபிஷேகம் செய்து வைத்தனர்.இதை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை பந்தகால் நடும் நிகழ்ச்சி,எஜமானர்கள் காப்பு கட்டும் நிகழ்ச்சி கோவில் வளாகத்தில் நடைபெற்றது. இதன் பின்னர்,கிராம தேவதை வழிப்பாடு,கணபதி பூஜை,லட்சுமி பூஜை,நவகிரக ஹோமம்,கோ பூஜை உள்ளிட்டவைகளுடன் மகா கும்பாபிஷேக நிகழ்ச்சி துவங்கியது.நேற்று காலை நான்காம் காலையாக பூஜை நடைபெற்றது.இதன் பின்னர், மகாபூர்ணாகுதி நடைபெற்றது.

இதைத்தொடர்ந்து புனித நீர் அடங்கிய கலசங்கள் மங்கள வாத்தியம் முழங்க கோவிலை சுற்றி ஊர்வலமாக கொண்டு வந்தனர்.காலை 10 மணிக்கு கோவில் விமான கோபுரங்களுக்கும்,மூலவர் அருள்மிகு ஸ்ரீ ஏகவள்ளி அம்மன் மற்றும் சப்த கன்னிகைகளுக்கு புனித நீர் ஊற்றி மகா கும்பாபிஷேகம் செய்தனர்.பின்னர்,மகா அபிஷேகம், மகா அலங்காரம்,மாங்கல்ய தாரணம்,மகா தீபாராதனை உள்ளிட்டவை நடைபெற்றது. இதை தொடர்ந்து கோவில் வளாகத்தில் அனைத்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினரும், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளருமான டி.ஜே. கோவிந்தராஜன், பாட்டாளி மக்கள் கட்சியின் மாவட்ட செயலாளர் வி.எம்.பிரகாஷ் மற்றும் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். இரவு பூக்களாலும்,மின் விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்ட அருள்மிகு ஸ்ரீ ஏகவள்ளி அம்மன் வான வேடிக்கை மற்றும் மேளத்தாளம் முழங்க ராஜவீதி வழியாக திருவீதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்றது.நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கிராம பெருதனக்காரர்கள் மற்றும் கிராம பொதுமக்கள்,விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# துபாயில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மயிலாடுதுறை சமூக சேவகருக்கு மனிதநேய மாண்பாளர் விருது



துபாய், ஜூன். 2-
ஐக்கிய அரபு அமீரகம் துபாயில் அறந்தாங்கி அசோசியேஷன் (AIM) சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மனிதநேய மாண்பாளர் விருதினை மயிலாடுதுறை மாவட்டத்தை சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் ஆயப்பாடி முஜிபுர் ரஹ்மானுக்கு இயக்குனரும் நடிகருமான சசிகுமார் வழங்கினார்.

விருதினை பெற்ற ஆயப்பாடி முஜிபுர் ரஹ்மான் சமூக நலம், மனிதநேய பணிகள் உள்ளிட்ட அனைத்து நற்பணிகளிலும் சிறப்பாக செயல்பட ஊக்கப்படுத்தி தொடர்ந்து ஆதரவு செய்து வரும் அனைவர்களுக்கும் மரியாதை தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக அயோத்தி திரைப்பட இயக்குனரும் நடிகருமான சசிகுமார், க.பெ ரணசிங்கம் படத்தின் இயக்குனர் விருமாண்டி, தவம் படத்தின் தயாரிப்பாளர் காதர், பட்சா முத்துராமலிங்கம் படத்தின் நடிகர் வாசி உள்ளிட்டோர் கலந்துக்கொண்டு பல்வேறு நற்பணிகளில் சிறப்பாக ஈடுபட்டுவருபவர்களுக்கு விருதுகளை வழங்கினர் .

நிகழ்ச்சியினை அறந்தாங்கி AIM மன்றத்தின் அமீரக ஒருங்கிணைப்பாளர் சேக் அப்துல்லா கனி தலைமையில் ஏற்பாடு செய்திருந்தார். மேலும், பல்வேறு நலப் பணிகளுக்கு வழிகாட்டுதல் என பல்வேறு மனிதநேய பணிகளுக்காக, தமிழ் குடில் மகாதேவன், தினத்தந்தி துபாய் பதிப்பின் ஆசிரியர் சாகர், சமூக ஆர்வலர் ராஜா உள்ளிட்ட பல்வேறு நிர்வாகிகளுக்கு மனிதநேய மாண்பாளர் விருது வழங்கப்பட்டுள்ளது.

அறந்தாங்கி சேக் அப்துல்லா கனி, ஐக்கிய அரபு அமீரகம் துபாய் அரசின் அனுமதிபெற்ற துபாய் ஈமான் கலாச்சார அமைப்பின் பொதுச்செயலாளர் ஹமீது யாசின் மற்றும் துபாய் ஈமான் நிர்வாகிகள் உள்ளிட்டோர் இரவு பகல் பாராது அயராது ஈமான் கலாச்சார மையத்தின் மேம்பாட்டுக்காக சமூக நலன் மனிதநேய பணிக்காக அயலக தமிழர்களுக்காக உழைத்து வரும் நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் ஆயப்பாடி முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

# காரைக்கால் மாவட்ட கல்வித்துறை அலுவலகம் முன்பு மக்கள் போராட்ட குழு சார்பில் முற்றுகை போராட்டம்



காரைக்கால் , ஜூன். 2-
புதுச்சேரி மாநிலத்தில் தமிழக பாடத்திட்டத்தை பின்பற்றி பள்ளிகள் இயங்கி வந்த நிலையில் தற்போது சி.பி.எஸ்.சி பாடத்திட்டத்தை புதுச்சேரி மாநிலத்தில் அமல்படுத்தப்பட்டு இந்த ஆண்டு முதல் சிபிஎஸ்இ பாடத்திட்டத்தை பின்பற்ற உள்ளனர்.

இந்த நிலையில் புதுச்சேரி மாநிலத்தில் சிபிஎஸ்சி பாடத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் சமூக அமைப்பினை எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். புதுச்சேரி மாநிலம் காரைக்கால் மாவட்டத்தில் நேற்று சிபிஎஸ்சி பாடத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து காரைக்கால் மாவட்ட கல்வித்துறை அலுவலகம் முன்பு காரைக்கால் மக்கள் போராட்ட குழு சார்பில் முற்றுகை போராட்டம் நடைபெற்றது.

இதில்காரைக்கால் மக்கள் போராட்ட குழுவின் ஒருங்கிணைப்பாளர் அன்சாரி பாபு தலைமையில் இணை ஒருங்கிணைப்பாளர்கள் பன்னீர்செல்வம் சூர்யா விடுதலை சிறுத்தைகள் கட்சியின் அரசியல் குழு செயலாளர் செந்தமிழ் செல்வன் காரைக்கால் போராளிகள் குழு தலைவர் அப்துல் ரஹீம் காரைக்கால் போராளிகள் குழு செயலாளர் விடுதலைக்கனல் உள்ளிட்ட 100க்கும் மேற்பட்டோர் முற்றுகை போராட்டத்தை ஈடுபட்டனர். அப்பொழுது சிபிஎஸ்சி பாடத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும், தமிழை கட்டாய மொழியாக அமுல்படுத்த வலியுறுத்தியும் புதுச்சேரி மாநில கல்வித்துறை கண்டித்து கண்டன கோஷங்கள் எழுப்பி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# 40 லட்சம் செலவில் புனரமைக்கப்பட்ட காரைக்கால் சிறைச்சாலையை எம்.எல்.ஏ நாஜிம் திறந்து வைத்தார்




காரைக்கால், ஜூன்,2
காரைக்கால் ஆரசலாற்று கரை ஓரமாக பிரஞ்சுகாரர்கள் கட்டிய பழமையான காரைக்கால் தனி கிளை சிறைச்சாலை 1828-ஆம் ஆண்டு முதல் இயங்கி வந்தது. இதில் 80 கைதிகள் அடைக்கும் வசதி இருந்தது.

இந்த சிறைச்சாலை பழதடைந்ததினால் கடந்த 2019-ஆம் ஆண்டு மூடப்பட்டு குற்ற வழக்கில் கைதாகும் காரைக்கால் மாவட்ட கைதிகளை புதுச்சேரி மத்திய சிறைக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருந்தனர். கைதிகளை காரைக்காலில் இருந்து புதுச்சேரிக்கு 150-கிமீ பயணம் செய்து புதுவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்கள். இதனை தவிர்க்கும் வகையில் காரைக்கால் சிறைச்சாலையை பொதுப்பணித்துறை மூலம் ரூபாய் 40 இட்சம் செலவில் புனரமைக்கப்பட்டு பணிகள் முடிந்த நிலையில் நேற்று காலை 11.00 மணியளவில் காரைக்கால் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாஜீம் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் துணை மாவட்ட ஆட்சியர் (வருவாய்) ஜான்சன் மேலும் சிறைத்துறை தலைவர் ரவ்தீப்சிங்சாகர் ,உத்தரவின் பேரிலும் சிறைத்துறை தலைமை கண்காணிப்பாளர் அசோகன், காவல் கண்காணிப்பாளர் (தெற்கு) சுப்பிரமணியன், கண்காணிப்பாளர் பாஸ்கரன் உதவி கண்காணிப்பாளர் ஆனந்தராஜ் மற்றும் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சிதம்பரநாதன் உள்ளிட்ட அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

சிறைத்துறை தலைமை கண்காணிப்பாளர் கூறுகையில் காரைக்காலைச் சேர்ந்த கைதிகள் அனைவரும் இந்த சிறைச்சாலைக்கு கொண்டு வரப்படுவார்கள் என தெரிவித்தார். பெண் கைதிகள் மட்டும் புதுவையில் அடைக்கப்படுவார்கள் என்றும் தெரிவித்தார். புதிய ஜெயில் கட்டுவதற்காக காரைக்கால் மாவட்டம் அக்கறை வட்டம் பகுதியில் இடம் ஒதுக்கப்பட்டு உள்ளது. ஆனால் கட்டுமானப் பணிகள் தாமதம் ஆவதால் தற்சமயம் இந்த சிறைச்சாலை புனரமைக்கப்பட்டு பயன்பாட்டுக்கு நேற்று திறந்து வைக்கப்பட்டது என்றார்.

# அன்னிய பொருட்களை புறக்கணித்து உள்நாட்டு பொருட்களை ஆதரிக்க வேண்டும் தா. வெள்ளையன் வேண்டுகோள்



**செங்கல்பட்டு , ஜூன். 2-**
செங்கல்பட்டு மாவட்டம் அச்சரப்பாக்கம் நகர் பகுதியில்தமிழ்நாடுவணிக சங்கங்களின் பேரமைப்பு மாநில பொதுக்குழு கூட்டம் மாநிலத் தலைவர் வெள்ளையன் தலைமையில் நடைபெற்றது.

இந்த பொதுக்குழு கூட்டத்தில் தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டத்திலிருந்தும் ஏராளமான வணிக சங்கங்களின் பேரமைப்பு நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் கூறுகையில்தமிழ்நாட்டில் அரிசிமற்றும்பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய அத்தியாவசிய பொருட்கள் மீது ஜிஎஸ்டி வரி விதிக்கும் மத்திய மாநில அரசுகளை கண்டித்து காந்தியின் அறவழி போராட்டம் நடத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து அந்நிய பொருட்களை தடை செய்ய வேண்டும் என தெரிவித்தார் இவற்றினை தடை செய்யாவிட்டால் முதற்கட்டமாக மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை தமிழ்நாடு வணிக சங்க பேரமைப்பு சார்பில் முற்றுகை போராட்டம் நடத்தப்படும் மேலும் தமிழ்நாடு முழுவதும்சிறை நிரப்பும் போராட்டம் நடைபெறும் என தெரிவித்தார்.

மேலும் நேர்மையாக செயல்பட்ட ஐஏஎஸ் அதிகாரி சகாயம் அவர்களுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பை தமிழக அரசு திரும்ப பெற்ற நிலையில் மீண்டும் அவருக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என தா . வெள்ளையன் தெரிவித்தார்



சென்னை, புழல், காவாங்கரை, செக்போஸ்ட் அருகில் ஜி.என்.டி சாலையில் எழுந்தருளி அருள் பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ லட்சுமி நாராயணி அம்மன் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம், வைகாசி மாதம் 18ஆம் நாள், 01.06.2023 வியாழக்கிழமை, துவாதசி திதி, சுவாதி நட்சத்திரம், அமிர்த யோகம் கூடிய சுபயோக சுபதனத்தில் காலை 9.00மணிக்கு மேல் 10.30மணிக்குளாக கடக லக்னத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவினை தொடர்ந்து மகா தீபாராதனை, மகா அபிஷேகம், தீர்த்த பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து பி.எஸ்.பாண்டிய நாடார் குடும்பத்தின் சார்பாக மாபெரும் அன்னதானம் வழங்கப்பட்டது. விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஸ்ரீ லட்சுமி நாராயணி அம்மன் ஆலய நிர்வாகிகள், கும்பாபிஷேக விழா குழுவினர் மற்றும் கிராம பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த சுண்ணாம்புகுளம் அருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி உடன் அருள்மிகு ஸ்ரீ தேசமுத்து மாரியம்மன் திருக்கோவிலின் மகா கும்பாபிஷேகம்




ஊத்துக்கோட்டை, ஜூன். 2-
திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், சுண்ணாம்புகுளம் ஊராட்சியில் நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த அருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி உடன் அருள்மிகு ஸ்ரீ தேசமுத்து மாரியம்மன் திருக்கோவில் ஒன்று உள்ளது.மிகவும் சக்தி வாய்ந்த இக்கோவில் சிதிலமடைந்து காணப்பட்டது.

இதனால் கிராம பெருதனக்காரர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் மற்றும் விழா குழுவினர் இக்கோவிலை புனரமைத்து நேற்று காலை மகா கும்பாபிஷேகம் செய்து வைத்தனர்.இதை முன்னிட்டு செவ்வாய்க்கிழமை காலை முதல் கணபதி ஹோமம்,கணபதி பூஜை,கோ பூஜை, தன பூஜை,லட்சுமி குபேர பூஜை, தன்வந்திரி பூஜை உள்ளிட்ட பல்வேறு பூஜைகளுடன் மகா கும்பாபிஷேக விழா துவங்கியது.நேற்று காலை ஐந்தாம் கால பூஜை நிறைவு பெற்றது.

இதன் பின்னர், மகாபூர்ணகுதி நடைபெற்றது. இதைத்தொடர்ந்து பி.வி. என்.வெங்கட்ரத்தினம் ஐயர் தலைமையில் வந்திருந்த 15 பேர் கொண்ட வேத விற்பனர்கள் புனித நீர் அடங்கிய கலசங்களை மேள-தாளம் முழங்க,தாரை-தப்பட்டை ஒலிக்க கோவிலை சுற்றி ஊர்வலமாக கொண்டு வந்தனர்.காலை 10 மணிக்கு அருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவில் விமான கோபுரம்,மூலவர் உள்ளிட்டவைகளுக்கும், அதைத்தொடர்ந்து பத்தரை மணிக்கு அருள்மிகு ஸ்ரீ தேச முத்து மாரியம்மன் திருக்கோவிலின் விமான கோபுரம் மற்றும் மூலவருக்கு புனித நீர் ஊற்றி மகா கும்பாபிஷேகம் செய்தனர்.இதன்பின்னர், மகா அபிஷேகம்,மகா அலங்காரம், மகா தீபாராதனை உள்ளிட்டவை நடைபெற்றது.பின்னர், பக்தர்களுக்கு தீர்த்தம், பிரசாதம் உள்ளிட்டவை வழங்கப்பட்டது.கோவில் வளாகத்தில் அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற தலைவர் ரவி,ஒன்றிய குழு உறுப்பினர் உஷா, முன்னாள் ஒன்றிய துணைப் பெருந்தலைவர் ஸ்ரீதர் மற்றும் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்களும்,உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளும், சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.இன்று முதல் 48 நாட்கள் மண்டலபிஷேகம் நடைபெறுகிறது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கிராம பெருதனக்காரர்கள் மற்றும் கிராம பொதுமக்கள் மற்றும் விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

## புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளத்தில்
# அரங்குல லிங்கம் பெரியநாயகி அம்பாள் கோவிலில் விசாக பெரும் திருவிழா

திருவரங்குளம், ஜூன்.2–

புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளத்தில் வரலாற்று புகழ்மிக்க சோழர் காலத்து சுயம்புலிங்க அரங்குல லிங்கம் பெரியநாயகி அம்பாள் கோவில் உள்ளது. கோவிலில் ஆண்டுதோறும் வைகாசி விசாக பெரும் திருவிழா நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டு கடந்த மாதம் 24 ஆம் தேதி கொடியேற்றத் இத்துடன் துவங்கி நடைபெற்று வருகின்றது. தினமும் காலை, இரவு நேரங்களில் சுவாமி அம்பாள் குதிரை வாகனம், அன்னவாகனம், காமதேனவாகனம், சிங்கவாகனம், உள்ளிட்ட பல்வேறு வாகனங்களில் வீதி உலா நடைபெற்று வருகின்றது. ஒன்பதாம் நாள் திருவிழாவை முன்னிட்டு சாமி அன்பாள் அபிஷேகா ஆராதனை சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று. பட்டாடை அணிவித்து மலர் அலங்காரம்



செய்து தங்க ஆவாரணங்கள் அணிவித்து மேலதாளம் வான வேடிக்கையுடன் தேரில் எழுந்தருள செய்து சிவாச்சாரியார்கள், வேத மந்திரங்கள்,மகா தீபம் காட்டி கோவில் அலுவலர் தட்சிணாமூர்த்தி ஊராட்சி மன்ற தலைவர் மகேஸ்வரி ஆறுமுகம், ஒன்றிய கவுன்சிலர் சிதம்பரம் மற்றும் மண்டகப்படி தாரர்கள், கோவில் பணியாளர்கள் ஊர் முக்கிய பிரமுகர்களுக்கு மரியாதை செய்யப்பட்டது.

கோவில்பட்டி தேர் வகையறாவினர் பிரதமிருந்து ஊர்வலமாக வருகை தந்து கோவிலில் தரிசனம் செய்துவிட்டு இரண்டு வைர தேர்களையும் பாரம்பரிய வழக்கப்படி தீண்டாமை ஒழிப்பு உணர்த்தும் விதமாக தேர் வடம் தொட்டுவிட அனைத்து பக்தர்களும் சிவசிவ ஹரஹர கோசத்துடன் தேரினை தேரோடும் நான்கு வீதிகளிலும் இழுத்துச் சென்றனர். பக்தர்கள் ஆங்காங்கே அர்ச்சனை செய்தும் வழிபாடு மேற்கொண்டனர். தேர் செல்லும் வழிகள் எல்லாம் பக்தர்கள் தண்ணீர் பந்தல் அமைத்தும் திருமண மண்டபங்களில் அன்னதானம் வழங்கியும் சிறப்பித்தனர். நேற்று காலை 10 மணிக்கு துவங்கிய தேர் பவனே 11:15 மணிக்கு நிலைக்கு வந்தது. பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. திருவரங்குளம் வட்டார பகுதியைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் இந்த விழாவில் கலந்து கொண்டனர்.

# இறுதி அஞ்சலி செலுத்தியபோது திடீரென விழித்தெழுந்த நபர் : அலறியடித்து உறவினர்கள் ஓட்டம்

மத்தியபிரதேசம், ஜூன்.2–

இறந்ததாக நினைத்து இறுதிச்சடங்கு செய்து, தகனம் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்தனர். டாக்டர் வந்து பரிசோதனை செய்துபார்த்தபோது உயிர் இருந்தது தெரியவந்தது.

மத்திய பிரதேசத்தில் இறந்ததாக நினைத்த நபர் இறுதிச்சடங்கு செய்வதற்கு சிறிது நேரத்திற்கு முன்னதாக எழுந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது, மத்திய பிரதேச மாநிலம் மொரேனா பகுதியைச் சேர்ந்தவர் ஜீது பிரஜாபதி கடந்த 30ம் தேதி திடீரென மயங்கி விழுந்துள்ளார். வெகுநேரமாகியும் அவர் எழுந்திருக்கவில்லை. இதனால் அவர் உயிரிழந்ததாக குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் நினைத்தனர். அவருக்கு இறுதிச்சடங்கு செய்து, தகனம் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்தனர்.

மாலை போட்டு அஞ்சலி செலுத்தியபோது திடீரென அவர் கண்விழித்தார். இதனால் குடும்பத்தினர் அதிர்ச்சியும்



ஆச்சரியமும் அடைந்தனர். சுற்றியிருந்தவர்கள் பயந்து அங்கிருந்து ஓட்டம்பிடித்தனர். உடனே டாக்டருக்கு தகவல் கொடுத்து வரவழைக்கப்பட்டார். அவர் வந்து மாலையும் கழுத்துமாக அசைவற்று கிடந்த ஜீது பிரஜாபதியை பரிசோதனை செய்துபார்த்தபோது உயிர் இருந்தது தெரியவந்தது. இதையடுத்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்படி டாக்டர் அறிவுறுத்தி உள்ளார். உடனடியாக மேல் சிகிச்சைக்காக குவாலியரில் உள்ள மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதேபோன்று இறந்ததாக நினைத்த நபர் உயிருடன் எழுந்த நிகழ்வுகள் இதற்கு முன்பும் நடந்துள்ளன.

# ஆவுடையார்கோவில் அருகே திருப்புனவாசலில் பெரியநாயகி அம்பாள் கோவில் தேரோட்டம்

ஆவுடையார்கோவில், ஜூன்.2–

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் அருகே உள்ள திருப்புனவாசல் ஸ்ரீ பழம்பதி நாதர் மற்றும் சமேத பெரியநாயகி அம்பாள் திருக்கோவிலுக்கு கடந்த ஒன்பது நாளைக்கு முன்னால் கொடியேற்றத்துடன் நடைபெற்ற திருவிழாவில் நேற்று திருத்தேரோட்டம் நடைபெற்றது.

கோயிலின் எதிர்ப்புறம் அமையப்பெற்றுள்ள திருத்தேரை நான்குபெரிய கயிறு மூலம் அப்பகுதி பொதுமக்கள் இழுத்து நான்கு வீதிகளையும் சுற்றி வந்து, ஆங்காங்கு பக்தர்கள் அர்ச்சனை



செய்து பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்து மீண்டும் அதே இடத்தில் திருத்தேர் அமையப்பெற்று தீபாராதனையுடன் பொதுமக்களும் பக்தர்களும் சுவாமி தரிசனம் செய்தனர். இந்த திருவிழாவிற்கு கோட்டைப்பட்டினம் காவல் துணை கண்காணிப்பாளர் கௌதம்.தலைமையில் காவல் துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர், நான்கு வீதிகளிலும் ஆங்காங்கே சுமார் 3000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் அன்னதான நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டனர்.

# தென்காசி மாவட்டம் புளியங்குடியில் மீனாட்சியம்மன்கோவில் வைகாசி மாதத் திருவிழா

தென்காசி,ஜூன்.2–

தென்காசி மாவட்டம் புளியங்குடியில் அருள்மிகு மீனாட்சியம்மன் சமேத ஸ்ரீ சொக்கலிங்க சுவாமி கோவிலின் வைகாசி மாத பிரமோற்சவ திருவிழாவும், கொடியேற்று திருவிழாவும் செங்குந்த முதலியார் சமுதாயத்தினரால் 24.5.2023அன்று தொடங்கி ஒன்பது நாட்கள் சுவாமி அழைப்பு, அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை, சுவாமி வீதி உலா ஆகியவை வெவ்வேறு சமுதாயத்தினரால், மண்டகப்படி தாரர்களால் கொண்டாடப்பட்டது.

முதலாவது நாள் இல்லத்தார் சமுதாயம்,இரண்டாம் நாள் யாதவ சமுதாயம், மூன்றாம் நாள் வணிக வைசியர் சமுதாயம், நான்காம் நாள் சைவ வேளாளர் சமுதாயம், ஐந்தாம் நாள் சேனைத்தலைவர் சமுதாயம், ஆறாம் நாள் யோகீஸ்வர சமுதாயம்,ஏழாம் நாள் விஸ்வ குல சமுதாயம்,எட்டாம் நாள் செங்குந்தர்



சமுதாயமும்,ஒன்பதாம் நாள் அனைத்து சமுதாயமும் சேர்ந்து சுவாமி திருத்தேர் வடம் பிடித்து இழுத்தனர், இதில் புளியங்குடி நகர் மன்றத் தலைவி விஜயா சௌந்தர பாண்டியன், நகர் மன்ற துணைத் தலைவரும் திமுக நகரச் செயலாளருமான எ. அந்தோணிசாமி பொதுமக்களுடன் தேரினை வடம் பிடித்து இழுத்து தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் சித்துராஜ், பண்டாரம், ராஜவேல் பாண்டியன், நகர் மன்ற உறுப்பினர் கார்த்திக், ஞான பண்டிதன் இந்து சமய அறநிலை துறை சார்பாக கே. சாலை லட்சுமி தக்கார், வா. சரவணகுமார் ஆய்வாளர், அ.ர. ஸ்ரீதேவி நிர்வாக அதிகாரி, புளியங்குடி காவல்துறை ஆய்வாளர் மற்றும் சமூக நல்லிணக்க தொண்டு நிறுவன உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர், இவ்விழாவில் 5000க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டு தேரை வடம்பிடித்து இழுத்து சுவாமி தரிசனம் செய்தனர், திருவிழாவுக்கு வந்த பக்தர்கள் அனைவருக்கும் வள்ளலார் தொண்டு நிறுவனம் சார்பாக அறுசுவை உணவு தண்ணீர் வழங்கி சிறப்பித்தனர்.



தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட கலெக்டர் தீபக் ஜேக்கப் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்றது. கூடுதல் கலெக்டர் (வருவாய்) மரு.என்.ஓ.சுகபுத்ரா, அரசு அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் உடன் உள்ளனர்.

# சிங்கப்பூரில் நடந்த ‘ஸ்குவிட் கேம்’ பாணி விளையாட்டில் ரூ.11 லட்சம் வென்ற தமிழர்

சிங்கப்பூர், ஜூன்.2–

தென்கொரியாவின் ‘ஸ்குவிட் கேம்’ வெப் சீரிஸை பிரதியெடுத்து சிங்கப்பூரில் நடத்தப்பட்ட விளையாட்டில் பங்கேற்ற தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர் ரூ.11 லட்சத்தை வென்றுள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் செல்வம் ஆறுமுகம். 42 வயதான இவர் கடந்த 2007-ம் ஆண்டு பணிநிமித்தமாக சிங்கப்பூர் சென்றார். அங்கு அவர் பொலிசம் இன்ஜினியரிங் (Pollisum Engineering) என்ற நிறுவனத்தில் சிக்னல் மேனாக பணிபுரிந்து வருகிறார். இந்நிலையில், அவரது நிறுவனம் சார்பில் ‘ஸ்குவிட் கேம்’ வெப் சீரிஸை தழுவிய விளையாட்டு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

‘ஸ்குவிட் கேம்’ என்பது தென்கொரிய வெப் சீரிஸ். கடந்த 2021-ம் ஆண்டு நெட்ஃப்ளிக்ஸ் ஓடிடி தளத்தில் வெளியான இந்த வெப் சீரிஸ் பல்வேறு விளையாட்டுகளை அடிப்படையாக கொண்டது. வென்றால் வெகுமதியும், தோற்றால் கொல்லப்படும் அபாயமும் கொண்ட இந்த வெப் சீரிஸ் பெரும் வெற்றி பெற்றது. ஆனால், சிங்கப்பூரில் நடந்த விளையாட்டில் அதுபோல் அதிர்ச்சி முடிவு எல்லாம்




இல்லை. எனினும், அதில் இடம்பெற்ற விளையாட்டுகள் இருந்தன. இந்த வெப் சீரிஸ் குறித்தோ, அந்த விளையாட்டுகள் குறித்தோ அறியாத செல்வம் போட்டியில் பங்கேற்றுள்ளார்.

‘ஸ்குவிட் கேம்’ வெப் சீரிஸில் வருவது போல ஜாக்கெட்டுகளும், ட்ராக் சூட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அதன் பாதுகாவலர்களும் சிகப்பு கலர் ஜம்ஷூட்களை அணிருந்தது மட்டுமல்லாமல் பணம் அடங்கிய உண்டியல் ஒன்றையும் காட்சிக்கு வைத்துள்ளனர். விளையாட்டின் விதிமுறைகளை அறியாத ஆறுமுகம் தனக்கு முன்னால் இருப்பவர்கள் செய்வதைக் கண்டு அறிந்து அதன் மூலம் விளையாடியுள்ளார். இதில் வெற்றிபெற்ற அவர், ‘என்னால் இதை நம்பமுடியவில்லை” என்று கூறியிருக்கிறார். மேலும் இந்த ரூ.11 லட்சம் என்பது ஆறுமுகத்தின் ஒன்றரை ஆண்டுகால வருமானம்.

இந்த வெற்றிகுறித்து பேசிய அவர், “இந்தப் பணத்தை வைத்து இந்தியாவில் எனது குடும்பத்திற்காக வீடு ஒன்றை கட்டுவேன். என் குடும்பத்தில் மொத்தம் 15 பேர். அவர்கள் வாடகை வீட்டில் தான் தங்கியிருக்கிறார்கள். அண்ணன் பிள்ளைகளின் படிப்புச் செலவுக்கு பணத்தை பயன்படுத்துவேன். இந்த நம்பமுடியாத விஷயத்தை என் வீட்டில் சொன்னதும் நான் ஏதோ ஜோக் சொல்கிறேன் என நினைத்தார் என் மனைவி. பின்னர், என் நண்பர் சொல்லியதும் தான் நம்பினார். இதைக்கேட்ட என் குடும்பத்தினர் அழுதுவிட்டனர். இது என் வாழ்நாளில் மறக்க முடியாத தருணம்” என்று தெரிவித்துள்ளார்.

# சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் ரஜினி நெல்சனின் ‘ஜெயிலர்’ படப்பிடிப்பு நிறைவு




சென்னை, ஜூன்.2–

ரஜினி நடித்துள்ள ‘ஜெயிலர்’ படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளதாக பட தயாரிப்பு நிறுவனமான சன் பிக்சர்ஸ் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் ரஜினி நடிக்கும் படம் ‘ஜெயிலர்’. தமன்னா, ரம்யாகிருஷ்ணன், சிவராஜ்குமார், மோகன்லால், சுனில், ஜாக்கி ஷெராஃப், வசந்த் ரவி, யோகிபாபு, ரெடின் கிங்ஸ்லீ உள்ளிட்ட பலர் நடிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். பான் இந்தியா முறையில் உருவாகும் இப்படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. படத்தில் ஜெயிலர் கதாபாத்திரத்தை ஏற்று நடித்துள்ளார் ரஜினி.

படத்தின் ஷெட்யூல் சென்னையில் நடைபெற்ற நிலையில் தற்போது மொத்த படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளதாக படத்தின் தயாரிப்பு நிறுவனமாக சன் பிக்சர்ஸ் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

படம் வரும் ஆகஸ்ட் 10-ம் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. விரைவில் படத்தின் முதல் சிங்கிள் வெளியாகும் என கூறப்படுகிறது. இந்தப் படத்தைத் தொடர்ந்து லைகா தயாரிப்பில் த.செ. ஞானவேல் இயக்கும் படத்தில் ரஜினி நடிக்க இருக்கிறார். ரஜினியின் 171வது படத்தை இயக்குநர் லோகேஷ் கனகராஜ் இயக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# சேலத்தில் நூல் வியாபாரி வீட்டில் 50 பவுன் நகைகள் திருட்டு – போலீஸ் தீவிர விசாரணை

சேலம், ஜூன்.2–

சேலத்தில் நூல் வியாபாரி வீட்டில் 50 பவுன் தங்க நகைகளைக் கொள்ளையடித்து சென்ற மர்ம நபரை போலீஸார் தேடி வருகின்றனர்.

சேலம் மரவனேரி 7-வது குறுக்குத்தெருவில் உள்ள சின்னையாபிள்ளை தெருவைச் சேர்ந்த நூல் வியாபாரி திருநாவுக்கரசு (66). இவரது மனைவி மல்லிகா (62). இவர்களது மூன்று மகன்களும் திருமணமாகி தனியே வசித்து வருகின்றனர். புதன்கிழமை இரவு சூரமங்கலத்தில் உறவினர் திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்கு சென்றுவிட்டு தம்பதியர் வீடு திரும்பினர். மல்லிகா அணிந்திருந்த நகைகளை கழற்றி அருகே இருந்த கண்ணாடி மேசையின் மீது நகை பெட்டியை வைத்துவிட்டு தூங்கச் சென்றார்.

அதிகாலை 3 மணி அளவில் வீட்டு படுக்கை அறைக்குள் சத்தம் கேட்டு, மல்லிகா, திருநாவுக்கரசு விழித்து பார்த்தனர். அப்போது, மர்ம நபர் ஒருவர், நகைப்பெட்டியை எடுத்துக் கொண்டு வெளியே ஓடியது தெரியவந்தது. அதிர்ச்சி அடைந்த தம்பதி கூச்சலிட்ட நிலையில், அருகில் இருந்தவர்கள் வந்தனர். ஆனால், மர்ம நபர் அதற்குள் தப்பி சென்று விட்டார்.

இது குறித்து அஸ்தம்பட்டி காவல் நிலையத்தில் திருநாவுக்கரசு அளித்த புகாரின் அடிப்படையில், மாநகர காவல் துணை ஆணையர் கவுதம்கோயல், உதவி ஆணையர்கள் பாபு, அசோகன், சரவணகுமார் தலைமையிலான போலீஸார் சம்பவ இடம் வந்து விசாரணை நடத்தினர். போலீஸார் விசாரணையில், வீட்டின் முன்புற கதவை உடைத்து புகுந்த மர்ம நபர் 50 பவுன் தங்க நகையை கொள்ளையடித்து சென்றது தெரியவந்தது.

சம்பவ இடத்தில் தடயவியல் துறை நிபுணர்கள் கைவிரல் ரேகைகளை பதிவு செய்தனர். மேலும், அப்பகுதியில் உள்ள சிசிடிவி கேமிராக்களின் பதிவை கொண்டு, போலீஸார் விசாரணை நடத்தி மர்ம நபரை தேடி வருகின்றனர்.

# தொடர்ந்து 3–வது முறையும் மத்தியில் பாஜக ஆட்சி அமைக்கும் ஜி.கே.வாசன் நம்பிக்கை

திருப்புவனம், ஜூன்.2–

தொடர்ந்து மூன்றாவது முறையும் மத்தியில் பாஜக ஆட்சி அமைக்கும் என தமாகா தலைவர் ஜி.கே.வாசன் நம்பிக்கை தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் தமாகா மாநில தொண்டரணித் தலைவர் அயோத்தி இல்ல திருமண விழாவில் பங்கேற்க வந்த ஜி.கே.வாசன் நேற்று செய்தியாளர்களிடம் கூறியது: ”மேகேதாட்டுவில் அணை கட்டப் போவதாக கர்நாடக துணை முதல்வர் அறிவித்தது கண்டனத்துக்குரியது. தமிழகத்தில் பல மாவட்டங்களில் குடிநீர் தட்டுப்பாடு உள்ள நிலையில், மேகேதாட்டு அணையை பற்றி பேசியிருப்பது வருத்தமளிக்கிறது. கர்நாடக காங்கிரஸ் ஆட்சியாளர்கள் தமிழக விவசாயிகளை வஞ்சிக்க துடிக்கின்றனர். இதில் தமிழக அரசு உறுதியுடன் செயல்பட வேண்டும். கர்நாடக காங்கிரஸ் தலைவர்கள் இனி இதுபோன்று பேசக் கூடாது என அகில இந்திய காங்கிரஸ் தலைமை கண்டிக்க வேண்டும்.



வருமான வரி விஷயத்தில் தவறு செய்திருந்தால், சந்தேகம் வந்தால் வருமான வரித் துறையினர் சோதனை நடத்துவது வழக்கம். சட்டம் தன் கடமையை செய்யும்போது யாரும் எதிர்க்கக் கூடாது. சோதனை முடிந்ததும் உண்மை வெளியே வரும்.

நாடாளுமன்றத்தில் செங்கோல் வைத்தது தமிழர்களுக்கு கிடைத்த பெருமை. அதைஜீரணிக்க முடியாதவர்கள், வரலாறு பற்றி திரித்து தவறான கருத்துகளைக் கூறி வருகின்றனர். இதனை தமிழக மக்கள் ஏற்கமாட்டர்” என்று அவர் கூறினார். தொடர்ந்து அவர் சிவகங்கையில் செய்தியாளர்களிடம் கூறியது: ’’முதல்வரின் வெளிநாட்டு சுற்றுப் பயணம் வெறும் விளம்பரமாக இருக்கக் கூடாது. குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் தொழில்கள் தொடங்க வேண்டும். பின்தங்கிய மாவட்டங்களில் புதிய தொழில்கள் தொடங்கி, வேலைவாய்ப்பை உறுதி செய்ய வேண்டும்.

மல்யுத்தவீரர்கள் சிறிது காலம் பொறுமையாக இருக்க வேண்டும். 2,000 ரூபாய் நோட்டுகளை திரும்ப பெறும் முடிவு சரியானதுதான். இது தவறான வழியில் பணத்தை சேர்த்தவர்களை மட்டுமே பாதிக்கும். திமுக அரசு முக்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறியதால், வாக்களித்த மக்கள் ஏமாற்றத்துடன் உள்ளனர்.


பாஜக ஆட்சியில் இந்தியா பாதுகாப்பாகவும், வளர்ச்சி அடையும் நாடாக மாறியுள்ளது. தொடர்ந்து மூன்றாவது முறையும் மத்தியில் பாஜக ஆட்சி அமைக்கும். புதிய நாடாளுமன்றம் தொடக்க விழாவை புறக்கணித்தவர்களை, தொகுதி மக்களே ஏற்றுக்கொள்ள மாட்டர்” என்று அவர் கூறினார். மாநில தொண்டரணித் தலைவர் அயோத்தி உள்ளிட்ட பலர் உடனிருந்தார்.

# கர்நாடகாவில் பயிற்சியின்போது ஐஏஎஃப் விமானம் விபத்து பாராசூட் உதவியுடன் தப்பிய விமானிகள்

புதுடெல்லி, ஜூன்.2–


இந்திய விமானப் படைக்குச் சொந்தமான சூர்ய கிரண் என்கிற பயிற்சி விமானம் கர்நாடகாவின் போகபுரா என்ற இடத்துக்கு அருகில் தரையில் விழுந்து விபத்துக்குள்ளானது. விமானம் வழக்கமான பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விமானம் தரையில் மோதுவதற்கு முன்பாக பயிற்சியில் ஈடுபட்டிருந்த பெண் விமானி உட்பட இரண்டு விமானிகளும் பாராசூட் மூலம் குதித்து உயிர்தப்பினர். விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்த இந்திய விமானப் படை உத்தரவிட்டுள்ளது.



சூர்ய கிரண் ரக விமானங்கள், இந்துஸ்தான் ஏரோநாடிகல் லிமிட்-ஆல் வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்டது. இந்திய விமானப் படை, அதன் விமானிகள் ஹவ்க் (Hawk) ஜெட்களில் பறப்பதற்கு முன்பாக, இடைநிலை பயிற்சி என்றழைக்கப்படும் இரண்டாம் கட்ட பயிற்சி மேற்கொள்வதற்காக சூர்ய கிரண் விமானத்தை பயன்படுத்தி வந்தது.

முன்னதாக, கடந்த மாதத்தில் ராஜஸ்தான் மாநிலத்தின் ஹனுமன்கர் பகுதியில் இந்திய விமானப் படைக்கு சொந்தமான மிக் (எம்ஐஜி) -21 ரக விமானம் குடியிருப்பு பகுதியில் மோதி விபத்துக்குள்ளானதில் மூன்று போர் உயிரிழந்தனர். விமானி உயிர் பிழைத்தார். வழக்கமான பயிற்சியின் போது நடந்த இந்த விபத்து குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த விபத்து நடந்து இரண்டு வாரங்கள் கழித்து மிக் ரக விமானங்களின் அனைத்து பயிற்சிகளையும் இந்திய விமானப்படை நிறுத்தி வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.



தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் வடக்கு ஒன்றியம் இனாம் கோவில்பட்டி பஞ்சாயத்தில் அனைத்து சமுதாயத்திற்கும் பாத்தியப்பட்ட அருள்மிகு செல்லியம்மன் கோவில் கும்பாபிஷேக விழா பாரதிய ஜனதா கட்சி வெளிநாடு மற்றும் அண்டை மாநில தமிழ் வளர்ச்சி பிரிவு மாநில துணைத் தலைவர் ஆனந்தன் தலைமையில் நடைபெற்றது. ஊர் நாட்டாமைகள் மாடசாமி, லட்சுமணன், கணக்கபிள்ளை பெருமாள்ராஜ், மாடசாமி,சுந்தர்,மாடசாமி, சின்னநாட்டாமைகள் மாரியப்பன், கோடுர்சாமி,உடையார் ஆறுமுகசாமி பஞ்சாயத்து துணைத்தலைவர் சீனிபாண்டி, வாணியராஜ், மகேந்திரன், குட்டி ராஜ், பால கணேஷ், மாடசாமி, அரிச்சந்திரன், பெருமால்ராஜ், முத்துசாமி மற்றும் ஊர் பொதுமக்கள், பக்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர் .பின்னர் நாடார் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட திருமண மண்டபத்தில் வைத்து ஊர் பொதுமக்கள்அனைவருக்கும் அன்னதானம் நடைபெற்றது.

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# கெஜ்ரிவாலுடன் சந்திப்பு: மத்திய அரசின் அவசர சட்டத்தை திமுக எதிர்க்கும்

# சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் உருவான ரஜினியின் ஜெயிலர் படப்பிடிப்பு நிறைவு





# மேகதாது: ஒருவருக்கொருவர் உதவி செய்து முன்னேறுவோம்


சென்னை / புதுக்கோட்டை | 02.06.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

02.06.2023 வெள்ளி

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

இளையராஜா, தென்னிந்தியத் திரைப்பட இசையமைப்பாளர் (பி.1943)



நந்தன் நிலெக்கணி, இந்தியத் தொழிலதிபர் (பி.1955)



ஸ்டீவ் சிமித், ஆத்திரேலியத் துடுப்பாளர் (பி.1989)



## இன்றைய நினைவு நாள்

தாவீது அடிகள், ஈழத்துத் தமிழறிஞர் (பி.1907) (இ.1981)



சி. ஜெயபாரதி, மலேசியத் தமிழறிஞர் (பி.1941) (இ.2015)



கவிக்கோ அப்துல் ரகுமான், தமிழகக் கவிஞர் (பி.1937) (இ.2017)



## பன்னாட்டு பாலியல் தொழிலாளர் நாள்